# மழையென்ன வெயிலென்ன குடை ஒன்றுதான்!



**அண்ணா!**

நீ நட்சத்திரமல்ல
ஆனால்,
சூரியனுக்குச்
சுடர்கொடுத்தாய்

நீ ஜமீன்தாரின்
சந்ததி அல்ல
தமிழ்நிலமே உன்
காலடியில் கட்டுண்டது

நீ கவிஞனல்ல
உன் உரைநடையும்
உரையும்
கூடிப்பெற்ற குழந்தைகளே
கவிஞர்களானார்கள்

வெற்றிலைக்குச்
சுண்ணாம்பு தடவும்போதே
எங்கள் இருளுக்கும்
வெள்ளையடித்தாய்

சட்டைப் பொத்தான்களைச்
சரியாகப் போடாத நீ
சரித்திரத்தின் பொத்தான்களைச்
சரியாய்ப் பொருத்திவிட்டாய்

நீ ஆயுதம் ஏந்தவில்லை
சில ஆயுதங்களைக்
கீழே எறிந்தே கீர்த்தியுற்றாய்

எந்த நிறத்தையும்
நீ வெறுக்கவில்லை
பல்லிற் படிந்த
வெற்றிலைக் காவியைக்கூட


நாவினால்
தன் காதுகளைச் சுத்தம்செய்யும்
ஒட்டகச் சிவிங்கிபோல
நாட்டையே சுத்திகரித்தாய்
நாவினால்

இழிபழி மொழிகளை
இடக்கையால் இடறினாய்
எந்தப் பறவை உன்மீது
எச்சமிட்டாலும் அதில்
இன்னொரு விருட்சத்திற்கு
விதை சேகரித்தாய்

எல்லாம் மறக்கப்படும்
காலக் கரையான்
கல்வெட்டுகளையும்
அரித்துவிடும்

ஆனால்,
நீ சூட்டிய பெயரில்
வாழ்ந்திருப்பாய்

'தமிழ்நாடு'



கவிப்பேரரசு
**வைரமுத்து**

## யெச்சூரியின் உடலுக்கு சோனியா காந்தி மரியாதை!

### அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி!

புதுடெல்லி, செப். 15 –

டெல்லியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள சீதாராம் யெச்சூரி உடலுக்கு, அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீதாராம் யெச்சூரி உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் காலமானார்.

அவரது உடல், பொதுமக்களின் அஞ்சலிக்காக டெல்லியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. யெச்சூரியின் உடலுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். காங்கிரஸ் கட்சி சார்பில் நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத்தலைவர் சோனியாகாந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோர் சீதாராம் யெச்சூரி உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

## தம்பிகள் தங்கக் கம்பிகள் !



என் தம்பிகள் ஒரு குறையும் இல்லாத தங்கக் கம்பிகள் !

ஆயிரம் ஆபத்துகள் அடுத்து வந்தாலும் அஞ்சி ஒதுங்காது அறப்போர் ஆற்றும் அடலேறுகள்! தீரர்கள்! தென்னாட்டை வாழ்விக்க வந்த பொன்னான வீரர்கள்! இப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சர்களை அருந்தம்பிகளாகப் பெறும் பேறு பெற்றேனே என்று பெருங்களிப்பு உறுகிறேன்.

- அண்ணா

### சமத்துவ – சகோதரத்துவத்தின் வெளிப்பாடாகத் திகழும்

## ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள உடன்பிறப்புகளுக்கு வாழ்த்துகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, செப். 15-**

**"சமத்துவ, சகோதரத்துவத்தின் வெளிப்பாடாகத் திகழும் ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் வாழ்த்துகள்" முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓணம் திருநாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கேரள மக்களின் பண்பாட்டுப் பெருவிழாவான ஓணம் திருநாள் உலகெங்கிலும் வாழும் மலையாளிகளால் எழுச்சியுடன் இன்று (15.9.2024) கொண்டாடப்படுகிறது. அத்தப்பூக்கோலம், அறுசுவை சத்ய விருந்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகள், போட்டிகள் என மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழும் நாளாகத் திருவோணம் அமைந்துள்ளது.

நல்லாட்சி புரிந்த மன்னனை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் சூழ்ச்சியாலும் வஞ்சகத்தாலும் வீழ்த்தினாலும், அவனை மக்கள் மனங்களில் இருந்து அகற்ற முடியாது என்பதை உணர்த்தும் கொண்டாட்டமாகவே ஓணத்தைக் காண வேண்டும்.

**கேரள மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தமிழ்நாடு!**

திராவிட உடன்பிறப்புகளான கேரள மக்களுக்கு ஓர் இடர் என்றால் உடனடியாக உதவிக்கரம் நீட்டத் தமிழ்நாடு என்றுமே சகோதர உணர்வோடு முன்னிற்கும். அந்த வகையில்தான், அண்மையில் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவின்போது தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கோடி ரூபாய் நிதியுதவி அளித்ததோடு, மீட்பு, மருத்துவக் குழுக்களையும் அனுப்பி வைத்தோம். பெருமழை விளைவித்த பாதிப்புகளில் இருந்து மலையாளிகளுக்கே உரிய போராட்டக் குணத்துடன் மீண்டு வரும் கேரள மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக இந்த ஓண நன்னாள் அமையும் என்று நம்புகிறேன்.

சமத்துவம், சகோதரத்துவத்தின் வெளிப்பாடாக ஓணத் திருநாளைக் கொண்டாடும் எனது அன்பிற்கினிய மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்கள் சகோதரன் ஸ்டாலினின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## ஆந்திராவில் அரசு பஸ் – லாரி மோதல்!

ஆந்திரா, செப். 15 -

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பலமனேர் மண்டலம் மோகினி காட் என்ற பகுதியில் பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மாலை திருப்பதியிலிருந்து பெங்களூரை நோக்கி பயணிகளுடன் ஆந்திர அரசு பஸ் சென்றுகொண்டிருந்தது.

அப்போது பெங்களூருவில் இருந்து சித்தூர் நோக்கி இரும்பு கம்பிகளை ஏற்றிக்கொண்டு லாரி வந்துகொண்டிருந்தது. மலைப் பகுதியில் நான்கு வழிச் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி பேரிகார்டுகளை உடைத்துக்கொண்டு எதிர் திசையில் சென்று அரசு பஸ் மீது பயங்கரமாக மோதியது.

இதில் 8 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.

## தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப். 15 -

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று முதல் 7 நாட்கள் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும்,

சென்னையில் 2 நாட்களுக்கு நகரின் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### கழக முன்னோடி – ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்

## மாங்குடி சி.முத்துக்கருப்பன் - மு.மலர்விழி இல்ல மணவிழா!

### சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூரில் இன்று நடைபெறுகிறது ! கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!



திருப்பத்தூர், செப். 15-

கழக முன்னோடியும் - ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருமான சி. முத்துக்கருப்பன் - மு. மலர்விழி இணையரின் புதல்வர் மணவிழா, இன்று சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூரில் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டம் - மாங்குடியைச் சேர்ந்த கழக முன்னோடியும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருமான சி. முத்துக்கருப்பன்- மு. மலர்விழி ஆகியோரின் புதல்வர் எம்.ஸ்ரீஹரி - சிவகங்கை மாவட்டம் - திருப்பாச்சேத்தி - ஆவரங்காடு (நினைவில் வாழும்) வி.எம். சேகர் - திருமதி சிவசங்கரி ஆகியோரின் புதல்வி எம்.எஸ். இலக்கியா ஆகியோரின் திருமதி திருமணம் இன்று (15.9.2024-ஞாயிற்றுக் கிழமை) காலை 9.00 மணி அளவில், சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூர் - தங்கமணி தியேட்டர் அருகில் உள்ள செந்தாமணி திருமண ஹாலில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.




பேரறிஞர்
அண்ணா
அவர்களின்
116ஆவது பிறந்த நாள்

பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, என்றும்
தமிழ்நாட்டு நலனுக்காக உழைத்திட இந்நாளில் உறுதியேற்போம் !

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 15.9.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணி
இடம் : அண்ணா சாலை, சென்னை

ஸ்கேன் செய்யுங்கள்
SCAN ME!
https://memorial.tn.gov.in
Arignar Anna Statue - Anna Salai, Chennai

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ/944/வரைகலை/2024